# இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலும் சர்வதேச விதிமுறைகளின் பயன்பாடும்: பாதுகாப்பதற்கான பொறுப்பு கூறல் தொடர்பான விசேட ஆய்வு

# The Israeli-Palestinian Conflict and the Application of International Norms: A Special Study on the Responsibility to Protect

N. Pushparajah
Senior Lecturer in Political Science,
Department of Social Sciences Eastern University, Sri Lanka.
Email: pushparajahn@esn.ac.lk

## Abstract

The Israeli-Palestinian conflict is an ongoing and protracted conflict that significantly impacts peace and security in global politics. The Responsibility to Protect (R2P) framework, adopted in 2005, is recognized as a crucial tool for preventing and addressing serious crimes that undermine global trust and security, including war crimes, crimes against humanity, ethnic cleansing, and genocide. R2P outlines the responsibilities of individual states, international organizations, and the international community as a whole to protect people threatened by these crimes through three main pillars. In this context, this research article assesses the application of R2P in the Israeli-Palestinian conflict, with a particular focus on the responsibilities of Israel and the international community in protecting Palestinians from international crimes in the occupied territories. The study reveals that the parties involved in the conflict, particularly the Israeli government forces and Palestinian militias, are committing widespread violations of human rights and humanitarian law, which constitute international crimes and are flagrant violations of international norms. Therefore, the Israeli-Palestinian situation warrants the full application of R2P to protect these populations and maintain international peace and security. While Israel theoretically bears primary responsibility for preventing and responding to mass atrocities in the Occupied Palestinian Territories, the international community also has a duty to intervene when Israel fails to fulfill its responsibilities or is directly involved in the violations. However, the practical application of R2P in this context faces numerous limitations and challenges, including security concerns, legal ambiguities, power dynamics, geopolitical interests, and diplomatic crises. According to R2P, both Israel and the international community have obligations to fulfill their responsibilities, yet impunity continues to cause suffering for the victims. Despite these challenges, R2P remains a consistent presence on international agendas. Therefore, continued international efforts are essential to bridge the gap between theory and practice, ensuring that the rights and dignity of both Israelis and Palestinians are protected.

**Keywords:** Israel, Palestine, Responsibility, Protection, International Crime.

**சுருக்கம்**

உலக அரசியலில் அமைதி மற்றும் பாதுகாப்பில் தாக்கம் செலுத்தக்கூடிய ஒரு நீடித்த மோதலாக இஸ்ரேல்-பாலஸ்தீன மோதல் காணப்படுகின்றது. அதே நேரம், 2005 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்புக்கான பொறுப்புக்கூறல் (Responsibility to Protect - R2P) உலகளாவிய நம்பிக்கை மற்றும் பாதுகாப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் இனப்படுகொலை போன்ற மோசமான குற்றங்களைத் தடுப்பதற்கும் தீர்வு காண்பதற்குமான ஒரு முக்கிய கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. R2P ஆனது மூன்று பிரதான தூண்களினூடாக சர்வதேசக் குற்றங்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் மக்களைப் பாதுகாப்பதில் தனிப்பட்ட நாடுகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த சர்வதேச சமூகம் போன்றவற்றின் பொறுப்பை விவரிப்பதாகக் காணப்படுகின்றது. இந்தப்பின்னணியின் அடிப்படையில் இந்த ஆய்வுக் கட்டுரையானது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் சர்வதேச குற்றங்களில் இருந்து பாலஸ்தீனியர்களைப் பாதுகாப்பதில் இஸ்ரேல் மற்றும் சர்வதேச சமூகத்தின் பொறுப்புகளை பிரதானமாகக் கொண்டு இஸ்ரேலிய-பாலஸ்தீனிய மோதலில் R2P இன் பயன்பாட்டை மதிப்பீடு செய்கின்றது. இவ்வாய்வானது மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள், குறிப்பாக இஸ்ரேலிய அரச படைகள் மற்றும் பாலஸ்தீனப் போராளிக்குழுக்கள் ஆகியவை சர்வதேச விதிமுறைகளை வெளிப்படையாக மீறி பாரியளவிலான மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களை பரவலாக மேற்கொள்கின்றன என்பதோடு அவை சர்வதேசக் குற்றங்களாகவும் வகைப்படுத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்தியுள்ளது. எனவே, இந்த மக்களைப் பாதுகாப்பதற்காகவும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவதற்காகவும் பாதுகாப்புக்கான பொறுப்புகூறலினுடைய பூரணமான பயன்பாட்டுக்கு இஸ்ரேல்-பாலஸ்தீனச் சூழ்நிலையானது தகுதியுடையதாகக் காணப்படுகின்றது. கோட்பாட்டுரீதியாக ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பாலஸ்தீனிய பிரதேசங்களில் பாரிய அட்டூழியங்களை தடுப்பதற்கும் அதற்கு பதிலளிப்பதற்குமான பிரதான பொறுப்பை இஸ்ரேல் ஏற்றுக்கொள்கின்ற அதேநேரம் சர்வதேச சமூகமும் இஸ்ரேல் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் அல்லது நிகழ்வின் ஒரு தரப்பாக இருக்கின்றபோது தடுத்தல் மற்றும் பதிலளித்தல் ஆகிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. எனினும், நடைமுறை ரீதியில் இந்தச் சூழ்நிலைக்கு R2P இன் பயன்பாடு பல்வேறு கட்டுப்பாடுகளும் சவால்களும் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. அந்த வகையில் அரசியல் ரீதியான சிக்கலான தன்மை, பாதுகாப்பு கரிசனைகள், சட்ட தெளிவின்மை, அதிகார இயக்கவியல், புவிசார் அரசியல் நலன்கள் மற்றும் இராஜதந்திர ரீதியான நெருக்கடிகள் உள்ளிட்ட சவால்களால் நிறைந்துள்ளது. R2P யின் பிரகாரம் இஸ்ரேல் மாத்திரமல்ல சர்வதேச சமூகமும் தங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றத்தவறியுள்ளன. தண்டனையின்மை பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து துன்பத்தை ஏற்படுத்துகின்றது. எனினும், R2P யினுடைய இருப்பு தொடர்ச்சியாக சர்வதேச நிகழ்ச்சிநிரல்களில் பேணப்படுகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. எனவே, கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கும், R2P யை நடைமுறைப்படுத்துவதற்கும் இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனியர்கள் இருவரின் உரிமைகள் மற்றும் கண்ணியம் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் தொடர்ச்சியான சர்வதேச முயற்சிகள் அவசியமானதாகும்.

**திறவுச் சொற்கள்**: இஸ்ரேல், பாலஸ்தீனம், பொறுப்புக் கூறல், பாதுகாப்பு, சர்வதேசக் குற்றம்.

## 1. அறிமுகம்

சர்வதேச அரசியல் வரலாறானது பல்வேறு சர்ச்சைகளையும் நெருக்கடிகளையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இவை அரசுகளுக்கிடையிலான உறவுகளிலும், சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு போன்றவைகளிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டில் உலகமானது பாரிய படுகொலைகளை எதிர்கொண்டது. 1945இல் ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா சபை) உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கம் இத்தகைய குற்றங்களைத் தடுத்து சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதாகும். எனினும் 1990களில் ருவாண்டா இனப்படுகொலை, முன்னாள் யூகோஸ்லாவியாவில் நடைபெற்ற பாரியளவிலான அட்டூழியங்கள், ஸ்ரெப்ரெனிகா படுகொலை (Srebrenica massacre) போன்றவை உலகத்தினுடைய மனச்சாட்சியை உலுப்பிய முக்கிய நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன (Kingsbury, 2012; Mardiyanto and Hidayatulloh, 2023). இத்தகைய பாரியளவிலான அட்டூழியங்களுக்கு சர்வதேச சமூகம் போதியளவு பதிலளிக்கவில்லை என்கின்ற ஒரு விமர்சனமும் முன்வைக்கப்பட்டது. எனவே, இத்தகைய நிகழ்வுகள் அரசுகளின் இறைமை பற்றிய பாரம்பரிய கருத்துக்களின் வரம்புகளையும், மோசமான குற்றங்களில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான ஒரு புதிய கட்டமைப்பின் அவசரத் தேவையையும் வெளிப்படுத்தியது. இந்தப் பின்னணியிலேதான், பாதுகாப்புக்கான பொறுப்புக்கூறல் [Responsibility to Protect- (R2P)] என்ற கருத்தானது 2005இல் ஐ. நா. உலக உச்சிமாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உலகளாவிய அரசியல் உறுதிப்பாடாக வெளிப்படுத்தப்பட்டது. பின்னர் ஐ. நா. பாதுகாப்புச் சபையாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இது சர்வதேச உறவுகளின் கோட்பாடு மற்றும் அரசியல் நடைமுறையினை மேலும் விரிவுபடுத்துவதற்கான அடித்தளத்தை வழங்கியது எனலாம் (Zifcak, 2015).

R2P ஆனது இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரிய அட்டூழியங்களைக் கொண்ட சர்வதேசக் குற்றங்களை சர்வதேச சமூகம் மீண்டும் நிகழ்வதை நிறுத்துவதற்குத் தவறாது என்பதை உறுதிப்படுத்த முயல்கிறது. 2005 ஆம் ஆண்டு உலக உச்சிமாநாட்டில் இக்குற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அனைத்து நாட்டுத் தலைவர்களும் அரசாங்கத் தலைவர்களும் உறுதி செய்தனர். ஒரு அரசியல் உறுதிப்பாடான R2P ஆனது சர்வதேசக் குற்றங்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் மக்களைப் பாதுகாப்பதில் தனிப்பட்ட நாடுகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த சர்வதேச சமூகம் போன்றவற்றின் பொறுப்பை விவரிப்பதாகக் காணப்படுகின்றது. அதாவது இந்தக் குற்றங்களிலிருந்து தமது சொந்த மக்களைப் பாதுகாப்பதற்கான அரசின் பொறுப்பு, இந்தக்கடமையை நிறைவேற்றுவதில் அரசுகளுக்கு உதவுவதற்கான சர்வதேச சமூகத்தின் பொறுப்பு, மற்றும் ஒரு அரசு இந்தக்குற்றங்களை தடுக்க இயலாமல் அல்லது விரும்பாதபோது குறிப்பிட்ட நாட்டின் மக்களைப் பாதுகாப்பதற்காகத் தலையிடும் சர்வதேச சமூகத்தின் பொறுப்பு போன்ற மூன்று பிரதான தூண்களை (pillars) உள்ளடக்கியதாக R2P காணப்படுகின்றது. இது அரசுகளின் இறைமைக்கு மதிப்பளிப்பதற்கும், பாரிய அட்டூழியங்களைத் தடுப்பதற்கும் அதற்குப் பதிலளிப்பதற்கும் சர்வதேச சமூகத்தின் கடமையை நிறைவேற்றுவதற்கும் இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்த முயல்கின்றது எனலாம். எனவே, R2P என்பது மனித உரிமைகள் மற்றும் கூட்டுப் பாதுகாப்புப் போன்ற 21ஆம் நூற்றாண்டின் யதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அரசுகளின் இறைமை பற்றிய பாரம்பரிய புரிதலின் மாற்றத்தை பிரதிபலிக்கின்றது என்பதோடு (United Nations, 2019) ஒரு கட்டமைப்புவாத முறைமைக்குள் பாரம்பரியமான அரச-மைய பாதுகாப்பு முன்னுதாரணங்களின் மீது தனிநபர்

பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளை வலியுறுத்துகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது (Pacheco, 2022).

மறுபுறம் சமகால உலக அரசியலில் அரசுகளுக்கிடையிலான உறவுகளில் தாக்கம் செலுத்துகின்ற ஒரு பிரதானமான மோதலாக இஸ்ரேல்-பாலஸ்தீனிய மோதல்கள் காணப்படுகின்றன. உலகில் இடம்பெறுகின்ற மோதல்களில் நீண்டகாலம் இடம்பெறுகின்ற மிகவும் சிக்கலான மோதல்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற இம்மோதலானது பிராந்திய தகராறுகள், மனித உரிமை மீறல்கள், மற்றும் வன்முறை போன்ற இயல்புகளை அதிகமாகப் பிரதிபலிக்கின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. 1948 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி பாலஸ்தீனத்தில் இருந்த யூத தலைமைத்துவம் இஸ்ரேலை ஒரு சுதந்திரமான தனியரசாகப் பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து இஸ்ரேல் பாலஸ்தீனம் ஆகியவைகளுக்கிடையினான மோதலானது தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பாலஸ்தீனத்தை மையப்படுத்தி அண்டைய அரபு நாடுகளும் இஸ்ரேலுடன் அடிக்கடி மோதலில் ஈடுபட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனால் யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் பொதுமக்களையும், அவர்களுடைய இலக்குகளையும், அவர்களுடைய உரிமைகளையும் பாதுகாப்பதற்காக சர்வதேச சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட நியமங்களும், விதிகளும் சம்மந்தப்பட்ட தரப்புக்களினால் வெளிப்படையாக மீறப்படுகின்ற போக்கு பரவலாகக் காணப்படுகின்றன என்பதோடு அந்தப்பிராந்தியத்தில் பல்வேறுபட்ட பாரிய அட்டூழியங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இதில் அண்மைக்கால மோதல், குறிப்பாக இஸ்ரேல்-ஹமாஸ் ஆகியவற்றுக்கிடையிலான மோதலானது மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேசரீதியில் கவனத்தையும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியவண்ணம் உள்ளன. பல்வேறு பட்ட ஆவணங்கள் மற்றும் ஆய்வுகள் காசாவிலும் ஏனைய ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் (The Occupied Palestinian Territories-OPT) சம்மந்தப்பட்ட தரப்பினரால் நிகழ்த்தப்படுகின்ற அட்டூழியங்கள் தொடர்பில் வெளிக் கொணர்ந்துள்ளன. இவை சர்வதேச குற்றங்களான போர்க்குற்றம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது (Global Centre for the Responsibility to Protect, 2023a; Amnesty International, 2022; 2023a;2023b). எனவே, பாலஸ்தீனச் சூழ்நிலையானது கோட்பாட்டு ரீதியாக அங்கு வாழும் அப்பாவி மக்களை சர்வதேசக் குற்றங்களிலிருந்து பாதுகாப்பதற்காக R2P உட்பட சர்வதேச விதிமுறைகளின் பூரண பிரயோகத்துக்கு தகுதியுடையதாகக் காணப்படுகின்றது.

அதேநேரம் R2P இன் பிரயோகம் மற்றும் அதன் நடைமுறைச் சவால்கள் குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக லிபியா, சிரியா, சூடான், இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளில் அதன் பிரயோகம் தொடர்பிலும் அதனுடைய பலவீனம் தொடர்பிலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (Dahl-Eriksen, 2016; Pacheco, 2022; Tang Abomo, 2019; Kingsbury, 2012; Paris, 2014; Thörnqvist, 2022). சில ஆய்வுகள் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் R2P யினுடைய அமுலாக்கத்தை பரிசீலித்துள்ளன. எனினும் இவை முழுமையான ஆய்வுகளாகக் கானப்படவில்லை (Ismail, 2022; El-Affendi, 2021; El-Affendi, 2023; Arab Center for Research & Policy Studies, 2023; Bellamy, 2014a). அதேநேரம் R2P தொடர்பான புரிதல்கள் மற்றும் அதன் நடைமுறை தாக்கம் என்பவை குறித்த ஆய்வுகள் தமிழ் மொழியில் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே, இந்த இடைவெளியை நிரப்புவதாகவே இந்த ஆய்வுக் கட்டுரை காணப்படுகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வினுடைய நோக்கம் இஸ்ரேல்-பாலஸ்தீனிய மோதலில் R2P யினுடைய பிரயோகத்தை மதிப்பிடுவதாக உள்ளது. அதாவது R2P யின் பிரகாரம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாலஸ்தீனிய மக்கள் சர்வதேச குற்றங்கள் தொடர்பாக எதிர்நோக்குகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பில் இஸ்ரேல், மற்றும் சர்வதேச சமூகத்தினுடைய பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் சவால்களை R2P இன் கீழ் ஆராய்வதாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது. எனினும், இந்த ஆய்வானது அங்கீகரிக்கப்படாத பாலஸ்தீன ஆயுதக்குழுக்களையோ பாலஸ்தீன நிர்வாகத்தினுடைய பொறுப்புக்களையோ முன்னிலைப்படுத்தவில்லை.

## 3. ஆய்வு முறையியல்

இது ஒரு கோட்பாட்டு சட்ட ஆய்வாகக் (Theoretical Legal Research) காணப்படுகின்றது. கோட்பாட்டுச் சட்ட ஆய்வானது சட்டப் பகுப்பாய்வு மூலம் சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சட்ட விதிமுறைகளை பகுப்பாய்வு செய்வதில் கவனம் செலுத்துகிறது (Shukla, 2023). இம்முறையியலானது சட்டக் கருத்துகளைப் புரிந்துகொள்வதற்கான முறையான அணுகுமுறையை வழங்குகிறது (Hofmann, 2023). அதாவது இம்முறையானது சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளை ஆராய்வதில் கவனம் செலுத்துகின்றது என்பதோடு இது சட்டத்தின் தற்போதைய நிலையைப் புரிந்துகொள்வதற்கும், அதன் எதிர்கால பரிணாமத்தை கணிக்கவும், சட்ட அமைப்பின் செயற்பாட்டை மேம்படுத்தவும் முயற்சிக்கின்றது. இவ்வாய்வானது பிரதானமாக இரண்டாம் நிலைத்தரவுகளில் தங்கியிருந்தாலும், தகவலைச் சரிபார்ப்பதற்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட சட்டப் பிரச்சினைகளைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறுவதற்கும் சில சமயங்களில் முதலாம் நிலைத் தரவுகளிலும் இவ்வாய்வு தங்கியிருக்கின்றது. அந்தவகையில் உலக உச்சி மாநாட்டு முடிவு ஆவணம், ஐ. நா. சமவாயம், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட ஆவணங்கள், பாதுகாப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்கள், ஏனைய அரச சார்பு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கைகள், ஊடக அறிக்கைகள் மற்றும் தொடர்புடையை ஆவணங்கள் போன்ற முதலாம் நிலைத் தரவுகளும், இந்த ஆய்வோடு தொடர்புடைய ஆய்வுப் புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், மாநாட்டு ஆய்வுகள் போன்ற பல்வேறு இரண்டாம் நிலைத்தரவுகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## 4. ஆய்வுக்கான கோட்பாட்டு அடிப்படை

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்பது, இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனச் சுத்திகரிப்பு ஆகிய நான்கு வெவ்வேறு சர்வதேசக் குற்றங்களைத் தடுப்பதற்கும் பதிலளிப்பதற்குமான வளர்ந்து வரும் ஒரு விதிமுறையாகவும் அரசியல் கொள்கையாகவும் காணப்படுகின்றது. இக் குற்றங்கள் பெரும்பாலும் கூட்டாக பாரிய குற்றங்கள், சர்வதேசக் குற்றங்கள் அல்லது R2P குற்றங்கள் எனவும் அறியப்படுகின்றன. 2005இல் ஐ. நா. உலக உச்சிமாநாட்டில் பாதுகாப்பதற்கான பொறுப்பானது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சர்வதேச அரசியல் வரலாற்றில் மிகப்பெரியளவிலான அரச மற்றும் அரசாங்கத் தலைவர்களின் மாநாடாகவே இது காணப்பட்டது. உலக உச்சிமாநாட்டின் முடிவு ஆவணத்தின் (World Summit Outcome Document, 2005) மூன்று தூண்களை (Pillars) அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்புக்கான பொறுப்பானது 138 மற்றும் 139 ஆகிய பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பொறுப்புக்களின் மூன்று தூண்களும் மேலும் தெளிவான வகையில் ஐ. நா. செயலாளர் நாயகத்தினுடைய பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துவது தொடர்பான 2009ஆம் ஆண்டு

அறிக்கையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன (United Nations Secretary General Report on Implementing the Responsibility to Protect, 2009).

### 4.1. பாதுகாப்புக்கான பொறுப்புக்கூறலின் தூண்கள்

பாரியளவிலான தவிர்க்கப்படக்கூடிய குற்றங்களிலிருந்து தமது மக்களைப் பாதுகாக்கும் முதன்மையான பொறுப்பு அரசுகளுக்கு உண்டு என R2P வலியுறுத்துகின்றது. எனினும், ஒரு அரசு அவ்வாறு செய்யத் தவறினால் அல்லது தானே குற்றவாளியாக இருந்தால் சர்வதேச சமூகம் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும். இவை இராஜதந்திர மற்றும் மனிதாபிமான முயற்சிகள், அல்லது கடைசி முயற்சியாக, ஐ. நா. பாதுகாப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இராணுவத் தலையீடு உள்ளிட்ட அமைதியான அல்லது பலாத்கார வழிகளின் ஊடாகத் தலையிடும் பொறுப்பை சர்வதேச சமூகம் கொண்டுள்ளது. எனவே, R2P யானது பொறுப்புடன் கூடிய இறைமை அதிகாரத்தை வலியுறுத்துகின்றது. அதாவது இக்கருத்து முழுமையான இறைமை தொடர்பான பாரம்பரிய பார்வையை சவால் செய்கின்றது என்பதோடு கடுமையான அச்சுறுத்தல்களிலிருந்து தங்கள் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுகளுக்கு உண்டு என்பதை அது வலியுறுத்துகின்றது.

***முதலாவது தூண் (Pillar One):*** இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனச் சுத்திகரிப்பு ஆகிய நான்கு பாரிய அட்டூழியக் குற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முதன்மையான பொறுப்பு ஒவ்வொரு அரசிற்கும் உள்ளது என முதலாவது தூண் வேண்டுகின்றது (United Nations Secretary General Report on Implementing the Responsibility to Protect, 2009; Global Centre for the Responsibility to Protect, 2023a).

***இரண்டாவது தூண் (Pillar Two):*** முதலாவது தூணில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தனிப்பட்ட அரசுகளை/நாடுகளை ஊக்குவிக்கவும் உதவவும் பரந்தளவிலான சர்வதேச சமூகத்திற்கு பொறுப்பு உள்ளது என இரண்டாவது தூண் வேண்டுகின்றது. இது சர்வதேசக் குற்றங்கள் தொடர்பிலான தடுப்பு நடவடிக்கைக்கான சர்வதேச சமூகத்தின் பொறுப்பை எடுத்துக்காட்டுகின்றது (United Nations Secretary General Report on Implementing the Responsibility to Protect, 2009; Global Centre for the Responsibility to Protect, 2023a).

***மூன்றாவது தூண் (Pillar Three):*** ஒரு அரசு தனது மக்களைப் பாதுகாப்பதில் வெளிப்படையாகத் தவறினால், சர்வதேச சமூகம் சரியான நேரத்தில் மற்றும் தீர்க்கமான முறையில், ஐ. நா. சாசனத்தின் VIIஆம் அத்தியாயத்தின் அடிப்படையில் பொருத்தமான கூட்டு நடவடிக்கை எடுக்க தயாராக இருக்க வேண்டும் என மூன்றாவது தூண் வேண்டுகின்றது. இது எதிர்வினையாற்றுவதற்கான சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும். அதாவது தடுப்பு நடவடிக்கைகள் தோல்வியுற்றால் சர்வதேச சமூகம் ஐ. நா. பாதுகாப்புச் சபை மூலம் பாரியளவிலான குற்றங்களைத் தடுப்பதற்கு பலத்தைப் பயன்படுத்துவது உட்பட, கூட்டு நடவடிக்கை எடுக்க இது அங்கீகரிக்கின்றது (United Nations Secretary General Report on Implementing the Responsibility to Protect, 2009; Global Centre for the Responsibility to Protect, 2023a).

### 4.2. பாதுகாப்புக்கான பொறுப்புக்கூறல் உருவாக்கப் பின்னணி: மனிதாபிமானத் தலையீட்டிலிருந்து பொறுப்புடன் கூடிய இறைமை அதிகாரம்

சர்வதேச உறவுகளில் ஒப்பீட்டளவில் புதியதொரு கோட்பாடான R2P ஆனது மனிதாபிமானத் தலையீட்டுக்கு மாற்றீடாக பொறுப்புடன்கூடிய அரசுகளின் இறைமை அதிகாரத்தை

வலியுறுத்துகின்ற ஒரு கோட்பாடாகும். இது 1990களில் நடந்த முழு மனித குலத்துக்கும் எதிரான பயங்கர நிகழ்வுகளின் விளைவுகளினால் உந்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது எனலாம். அதாவது ருவாண்டா மற்றும் பால்கன் (Balkans) போன்ற மோதல்களில் இடம்பெற்ற அட்டூழியங்களைத் சர்வதேச சமூகம் தடுக்கத் தவறியதன் பிரதிபலிப்பாக இது வெளிப்பட்டது (Kingsbury, 2012; Mardiyanto and Hidayatulloh, 2023). மேலும், கொசோவோவில் (Kosovo) மனிதாபிமானத் தலையீடு[1] என்ற போர்வையில் நேட்டோவினுடைய (NATO) இராணுவத் தலையீடானது பலத்தைப் பயன்படுத்துவதற்கான தடையை மீறிச்செயற்பட்டதாக பல்வேறு தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டது. அத்தோடு மனிதாபிமானத் தலையீடானது மேற்கத்தேய நாடுகளினால் மனிதாபிமானக் கரிசனை மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு என்ற போர்வையில் வளர்முக நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியதோடு 90களில் இவை சர்வதேசச் சட்டத்தின் கீழ் ஒரு அரசியற் கருவியாக நடைமுறைப்படுத்தப்பட்டது (Ismail, 2022; Arab Center for Research & Policy Studies, 2023). எனவே, இந்தப் பின்னணியின் அடிப்படையில் சர்வதேச சமூகமானது இவ்வாறான பாரியளவான மனித உரிமைகளின் முறையான மீறல்களுக்கு எவ்வாறு எதிர்வினையாற்றுவது என்பது பற்றிய தீவிர விவாதத்தில் ஈடுபட்டது. இந்த விவாதத்தின் மையக்கருத்து யாதெனில் அரசுகளுக்கு அவற்றின் விவகாரங்களில் நிபந்தனையற்ற இறைமை அதிகாரம் உள்ளதா அல்லது மனிதாபிமான நோக்கங்களுக்காக ஒரு நாட்டில் தலையிட சர்வதேச சமூகத்திற்கு உரிமை உள்ளதா என்பதாக அமைந்தது (Department of Public Information, 2012).

செப்டம்பர் 1999இல் ஐ. நா. பொதுச் சபையில் தனது வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்கும் போது, முன்னாள் ஐ. நா. செயலாளர் நாயகம் கோ.ஃபி அன்னான் (Kofi Annan) அவர்கள் "அடுத்த நூற்றாண்டில் மனித பாதுகாப்பு மற்றும் தலையீட்டிற்கான வாய்ப்புகள்" பற்றிய பிரதிபலிப்புக்களை வெளியிட்டார். அதாவது அவர் சாசனத்தின் கொள்கைகளை நிலைநிறுத்தி பொதுவாக மனித குலத்தைப் பாதுகாப்பதற்கான அடித்தளத்தைக் கண்டறியுமாறு உறுப்பு நாடுகளுக்கு சவால் விடுத்தார் (United Nations, 1999b). இதனை அடுத்து 2000ஆம் ஆண்டு தனது மிலேனியம் அறிக்கையில் (Millennium Report, 2000) அப்போதைய பொதுச் செயலாளர் கோ.ஃபி அன்னான் அவர்கள் பாதுகாப்புச் சபையானது ருவாண்டா மற்றும் கொசோவோவில் ஒரு தீர்க்கமான முறையில செயற்படத் தவறியுள்ளதாக அதன் தோல்விகளை நினைவுகூர்ந்து, உறுப்பு நாடுகளுக்கு ஒரு சவாலை முன்வைத்தார். அதில் "உண்மையில், மனிதாபிமான தலையீடு இறைமை அதிகாரத்தின் மீதான ஏற்றுக்கொள்ள முடியாத தாக்குதலாக இருந்தால், நமது பொதுவான மனித குலத்தின் ஒவ்வொரு நியமத்தையும் புண்படுத்தும் மனித உரிமைகளின் மொத்த மற்றும் முறையான மீறலுக்கு ருவாண்டா, ஸ்ரெப்ரெனிகா போன்றவற்றுக்கு நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?" (P. 48) என்ற கேள்வியை எழுப்பினார்.

அதேநேரம், கனேடிய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட சர்வதேச தலையீடு மற்றும் அரச இறைமை குறித்த ஆணைக்குழு [(International Commission on Intervention and State Sovereignty) (ICISS)] ஐ. நா. செயலாளரின் இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு 2001ஆம் ஆண்டின் இறுதியில் "பாதுகாப்பதற்கான பொறுப்பு" என்ற தலைப்பில் தனது அறிக்கையை வெளியிட்டது. எனினும், பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற கருத்து 1996ஆம் ஆண்டு பிரான்சிஸ் டெங்கின் (Francis Deng's) விருத்தி செய்யப்பட்டுள்ள அரசின் இறைமையானது பொறுப்பையும்

[1] மனிதாபிமான தலையீடு என்பது மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் மற்றும் தேசிய, இன அல்லது மத குழுக்களுக்கு எதிரான கடுமையான குற்றங்களை தடுக்க மற்றொரு அரசிற்கு எதிராக பலப்பிரயோகத்தைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய ஒரு கட்டாயச் செயல்முறையாகும்.

கொண்டுள்ளது என்ற சிந்தனையினால் கவரப்பட்டதாகக் காணப்படுகின்றது. அதாவது இறைமை அதிகாரம் என்பது வெளிப்புற தலையீட்டிலிருந்து பாதுகாப்பு மட்டுமல்ல, அவை தமது மக்களின் நலனுக்கான நேர்மறையான பொறுப்புகளையும் கொண்டுள்ளது என்பதோடு அரசுகள் இந்த நோக்கத்துக்காக ஒன்றுகொன்று உதவ வேண்டும் என்ற கருத்தையும் உறுதிப்படுத்தியது (Bellamy, 2014b; El-Affendi, 2023). இதன் விளைவாக, அதன் மக்களைப் பாதுகாப்பதற்கான முதன்மைப் பொறுப்பு முதலில் குறிப்பிட்ட அரசிடமே காணப்பட்டது. எவ்வாறாயினும், "மீதமுள்ள பொறுப்பு" என்பது அரசுகளின் பரந்த சமூகத்திடம் உள்ளது, இது "ஒரு குறிப்பிட்ட அரசு தெளிவாகப் பாதுகாக்க விரும்பாத அல்லது அதன் பொறுப்பை நிறைவேற்ற முடியாதபோது அல்லது குற்றங்கள் அல்லது அட்டூழியங்களின் உண்மையான குற்றவாளியாக இருக்கும்போது, இந்தப்பொறுப்பு பரந்த சர்வதேச சமூகத்துக்கு மாற்றப்படுகின்றது (United Nations, 2019).

இதன் பின்னர் அச்சுறுத்தல்கள், சவால்கள் மற்றும் மாற்றம் பற்றிய உயர்நிலைக் குழுவின் (High Level Panel on Threats, Challenges and Change) அடுத்த அறிக்கை, மிகவும் பாதுகாப்பான உலகம்: எங்கள் பகிரப்பட்ட பொறுப்பு (A More Secure World: Our Shared Responsibility) மற்றும் பொதுச் செயலாளரின் 2005இன் பரந்த சுதந்திரம்: சகலருக்குமான அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் (Larger Freedom: Towards Development, Security and Human Rights for All) போன்ற அறிக்கைள் மூலம் அரசின் இறைமை அதிகாரம் தனது சொந்த மக்களைப் பாதுகாக்கும் அரசின் கடப்பாட்டை எடுத்துச் செல்லும் கொள்கையை அங்கீகரித்தனர். மேலும் அரசு அவ்வாறு செய்ய விரும்பாவிட்டாலோ முடியாமலோ இருந்தால், இராஜதந்திர, மனிதாபிமான மற்றும் பிற வழிகள் ஊடாக அதைப் பயன்படுத்தி அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள/பாதிக்கப்பட்டுள்ள மக்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு மாற்றப்பட்டது. எனினும் இனப்படுகொலை மற்றும் பிற கடுமையான சர்வதேச குற்றங்கள் நிகழ்ந்தால் ஐ. நா. சாசனத்தின் VIIஆம் அத்தியாயத்தின் கீழ் பாதுகாப்பு சபையின் அங்கீகாரத்தைத் தவிர இந்த நோக்கத்திற்காக பலத்தைப் பயன்படுத்துவதற்கான அடிப்படையை எந்த அறிக்கையும் வலியுறுத்தவில்லை என்பதும் நோக்கத்தக்கதாகும் (United Nations, 2019).

2005 உயர்மட்ட ஐ. நா. உலக உச்சி மாநாட்டில் முடிவு ஆவணத்தில் (World Summit Outcome Document) பாதுகாப்பதற்கான பொறுப்பு தொடர்பான கொள்கைக்கு உறுப்பு நாடுகள் இறுதியாக உறுதியளித்தன. இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த பாதுகாப்பதற்கான பொறுப்பு தொடர்பான கருத்து ICISS ஆல் ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட சில அம்சங்களைத் தவிர்த்துவிட்டாலும், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டத்தின் மிகக் கடுமையான மீறல்களைத் தடுப்பது மற்றும் பதிலளிப்பது தொடர்பாக அதன் அடிப்படை அம்சங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மறுபுறம் 2009ஆம் ஆண்டும் ஜனவரி மாதம் ஐ. நா. பொதுச் செயலாளர் அவர்களினால் R2P யை செயல்படுத்துவது தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையானது R2P இன் மூன்று தூண்களை மேலும் தெளிவுபடுத்தியது. இதைத் தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் பாதுகாப்பதற்கான பொறுப்பு குறித்த முதல் பொதுச் சபை விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் ஐ. நா. உறுப்பு நாடுகள் 2005ஆம் ஆண்டு உறுதிமொழியை மீண்டும் உறுதிப்படுத்தியதோடு பொதுச் சபையானது பொதுச் செயலாளரின் அறிக்கையை கவனத்தில் கொண்டு ஒருமித்த தீர்மானத்தையும் நிறைவேற்றியது. ஐ. நா. பொதுச் சபையின் R2P குறித்த முறைசாரா ஊடாடும் உரையாடலுக்கு முன்னதாக, பொதுச் செயலாளர் ஆண்டு அறிக்கைகளை

வெளியிடுகின்றார். ஜூன் 2018இல், பொதுச் சபை 2009க்குப் பிறகு R2P பற்றிய முதல் விவாதத்தை நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Global Centre for the Responsibility to Protect, 2023b).

அதன் பின்னர் R2P தொடர்பான கருத்தானது பல்வேறு சூழ்நிலைகளுக்கு பிரயோகப்படுத்தப்பட்டது. அந்தவகையில், மத்திய ஆபிரிக்க குடியரசு, கோட் டி ஐவரி (Côte d'Ivoire), கொங்கோ ஜனநாயகக் குடியரசு, லைபீரியா, லிபியா, மாலி, சோமாலியா, தெற்கு சூடான், சிரியா மற்றும் யேமன் ஆகியவை தொடர்பாகவும் கருப்பொருள் (Thematic) ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பாகவும் 80க்கும் மேற்பட்ட ஐ. நா. பாதுகாப்பு சபைத் தீர்மானங்களில் R2P செயல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதேநேரம், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையானது இனப்படுகொலையைத் தடுப்பது, ஆயுத மோதல்களைத் தடுப்பது மற்றும் சிறிய மற்றும் இலகுரக ஆயுதங்களின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான 50க்கும் மேற்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொண்டது. அதேபோல் 13 பொதுச் சபை தீர்மானங்களிலும் R2P வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இறுதி முயற்சியான கட்டாய இராணுவ நடவடிக்கைகள் போன்றவை ஆபத்தில் உள்ள மக்களைப் பாதுகாப்பதற்கான கூட்டு நடவடிக்கைகளின் சாத்தியத்தை கோட்பாட்டு ரீதியாக நிரூபித்துள்ளன (Global Centre for the Responsibility to Protect, 2023b).

### 5. பாலஸ்தீன – இஸ்ரேலிய மோதல்-ஒரு சுருக்க வரலாறு

மத்தியதரைக் கடல் மற்றும் ஜோர்டான் நதிக்கு இடையில் உள்ள பகுதியில் தற்போதைய இஸ்ரேல் என்ற தனி அரசும், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பிரதேசங்களான கிழக்கு ஜெருசலேம் மற்றும் காசா பகுதி உட்பட மேற்குக் கரையை உள்ளடக்கிய பகுதிகளை உள்ளடக்கியதான பாலஸ்தீனப் பிராந்தியமும் காணப்படுகின்றது. ஆபிரகாமிய சமயத்தினரால் (Abrahamic religions) [2] இப்பகுதி புனித பூமி என அழைக்கப்படுவதோடு அவர்களால் உரிமை கோரப்படுவதாகவும் கானப்படுகின்றது. இந்தப் பகுதியின் பெரும்பாலானவை இஸ்ரேலின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டவையாகக் காணப்படுகின்றன. அதேநேரம் ஏனைய பிரதேசத்தில் வரையறுக்கப்பட்ட பாலஸ்தீனிய சுய-ஆட்சி வழங்கப்பட்டாலும், இஸ்ரேலானது இப்பிராந்தியங்களின் மீதும் தனது இறுதி கட்டுப்பாட்டு அதிகாரத்தை விஸ்தரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Robinson, 2024).

இஸ்ரேல்-பாலஸ்தீனத்துக்கு இடையிலான உறவானது மோதல்களாலும், வன்முறைகளாலும் அடையாளப்படுத்தப்படுகின்றது. இவ்விரு தரப்புக்கும் இடையிலான மோதலானது சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட ஆழமான வேர்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. நிலவுரிமையை மையப்படுத்தியதாக ஆரம்பமான இந்த யுத்தமானது பிராந்தியத்தில் அரசியல் கட்டுப்பாடு மற்றும் தேசிய அடையாளம் ஆகியவற்றிலும் ஊடுருவி பரந்துபட்ட விடயங்களின் உடன்பாடின்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதோடு பல்வேறுபட்ட பிராந்திய மற்றும்

[2] யூதசமயம், கிறிஸ்தவ சமயம். இஸ்லாமிய சமயம் ஆகிய மூன்றும் ஆபிரகாமிய மதங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் ஒரே கடவுளை நம்புகின்ற அதேவேளை அவர்கள் தங்களுடைய தோற்றப் பின்புலத்தை ஆபிரகாம் தீர்க்கதரிசியுடன் அடையாளப்படுத்துகின்றனர். இந்த வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளும் அதேநேரம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நிகழ்ச்சி நிரல்களினாலும் செயல்பாடுகளினாலும் ஆதரிக்கப்படுவதாகவும், ஆழப்படுத்தப்படுவதாகவும் காணப்படுகின்றது.

இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலின் வரலாற்றுப் பின்னணியை நோக்கும்போது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இப்பகுதியில் யூதர்கள் மற்றும் அரேபியர்களிடையே தேசியவாத இயக்கங்கள் எழுச்சியடைய ஆரம்பித்தன. 1800களின் பிற்பகுதியில் சியோனிச இயக்கம் (Zionist movement)[3] தோன்றியது. இவ்வியக்கமானது அப்போது ஒட்டோமான் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த பாலஸ்தீனத்தில் யூத தாயகத்தை நிறுவுவதற்கான முயற்சியில் ஈடுபட்டது. இந்தச் செயற்பாட்டின் ஒரு அங்கமாக பல யூதர்கள் பாலஸ்தீனத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு நிலம் வாங்கிக் குடியேறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தப் பின்னணியில் பாலஸ்தீனிய அரேபியர்கள் தங்களுடைய தேசிய அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக யூத குடியேற்றத் திட்டங்களையும், யூதர்கள் நிலம் வாங்குவதையும் எதிர்த்தனர். எனவே, யூதர்கள் மற்றும் அரேபியர்களினுடைய தேசியவாத இயக்கங்களின் எழுச்சியானது தங்களுடைய உரிமை மற்றும் அடையாளத்தை மையப்படுத்தியதாகவே காணப்பட்டது (Harms and Ferry, 2017; BBC, 2023). இப்பிராந்தியம் யூத பாலஸ்தீனர்கள் ஆபிரகாம் உட்பட தங்கள் மூதாதையர்கள் சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வாழ்ந்ததாகவும் இந்த தாயகம் அவர்களுக்குரியதென கடவுளால் வாக்குறுதி அளிக்கப்பட்டதாகவும் அவர்கள் நம்புகிறார்கள். அதேநேரம், பாலஸ்தீனிய அரேபியர்களும் இந்த நிலத்தை தங்களுடைய தாயகமாக உரிமை கோருகின்றனர் (Bard, 2019; Harms and Ferry, 2017).

முதலாம் உலகப் போரில் மத்திய கிழக்குப் பகுதியை ஆட்சி செய்த ஒட்டோமான் பேரரசு தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாலஸ்தீனம் என்று அழைக்கப்படும் பகுதியை பிரிட்டன் கைப்பற்றியது. முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து, பிரித்தானியப் பேரரசு சர்வதேச சங்கத்தினால் (League of Nations) வழங்கப்பட்ட ஆணையின் மூலம் பாலஸ்தீனத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொண்டது. 1917ஆம் ஆண்டின் பல்ஃபோர் (The Balfour Declaration of 1917) பிரகடனம் பாலஸ்தீனத்தில் யூத தேசிய தாயகத்தை அமைப்பதற்கு பிரித்தானியாவினுடைய ஆதரவை வெளிப்படுத்தியது. இந்த விடயம் அப்பகுதியில் யூதர்களுக்கும் அரேபியர்களுக்கும் இடையிலான பதட்டங்களை மேலும் ஆழப்படுத்திய நிகழ்வாகக் காணப்படுகின்றது (Shveitser, 2021; Harms and Ferry, 2017; BBC, 2023). 1920கள் மற்றும் 1940களுக்கு இடையில், ஐரோப்பாவில், குறிப்பாக இரண்டாம் உலகப் போரில் நாஜி இனப்படுகொலை (The Holocaus) துன்புறுத்தலில் இருந்து பலர் தப்பி ஓடியதால், பலஸ்தீனத்துக்கு வரும் யூதர்களின் எண்ணிக்கை அதிகரித்தது (Shveitser, 2021; Harms and Ferry, 2017;BBC, 2023).

பல தசாப்தகால மோதல்களைத் தொடர்ந்து நவம்பர் 29, 1947இல், ஐ. நா. சபையினால் தீர்மானம் 181 (United Nations Resolution 181) ஊடாக முன்மொழியப்பட்ட பிரிப்புத் திட்டமானது (Partition Plan) பாலஸ்தீனத்தை தனி யூத மற்றும் அரபு நாடுகளாக பிரிக்கும் திட்டத்தை இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுக்கான தீர்வாக முன்வைத்தது. இந்த திட்டம் யூத தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதேவேளை அரேபியத் தலைவர்களால் நிராகரிக்கப்பட்டது, 1948இல், பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் பிரிட்டன் வெளியேறியது (Shveitser, 2021; Harms and Ferry,

[3] சியோனிச இயக்கம், வரலாற்று ரீதியாக உலகம் பூராகவும் சிதறிக் கிடக்கும் யூத மக்களுக்காக ஒரு தாயகத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு இயக்கமாகும். இது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யூதமக்களுக்கு எதிராக அதிகரித்து வரும் யூத எதிர்ப்பு மற்றும் சுயநிர்ணயத்திற்கான ஈடுபாடு போன்றவற்றின் காரணமாக எழுச்சியடைந்தது. இந்த இயக்கம் இறுதியில் 1948இல் இஸ்ரேல் அரசை உருவாக்க வழிவகுத்தது.

2017; BBC, 2023; Britannica, 2019). 1948இல் இஸ்ரேல் தன்னை ஒரு சுதத்திர அரசாகப் பிரகடனப்படுத்தியது. எனவே, ஐ. நா. வின் பிரிப்புத் திட்டமானது பின்னர் அரபு-இஸ்ரேல் போருக்கு வழிவகுத்தது.

1948–49களில் நடைபெற்ற இப்போர் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் இடம்பெயர்வதற்கும் அண்டை நாடுகளில் அகதிகளாக்கப்படுவதற்கும் வழிவகுத்ததாகக் காணப்படுகின்றது. பாலஸ்தீனியர்கள் இதனை நக்பா [(Nakba) (பேரழிவு)] என்று குறிப்பிடுகின்றனர் (BBC, 2023; Britannica, 2019). இவைதவிர பல்வேறு யுத்தங்கள் அப்பிராந்தியத்தில் இடம்பெற்றது. அந்தவகையில் 1956, 1967, 1973, 1982 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் பாலஸ்தீனத்தை அடிப்படையாகக் கொண்டு இஸ்ரேலானது அரபு பிராந்தியத்தில் உள்ள ஏதேனும் ஒரு நாட்டுடனோ ஒன்றுக்கும் மேற்பட்ட அரபு நாடுகளின் கூட்டணியுடனோ போரில் ஈடுபட்டது. எனினும் இந்த மோதல்கள் அனைத்திலும் இஸ்ரேலின் கையே மேலோங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Britannica, 2019).

இதில் 1967இல் நடைபெற்ற ஆறு நாள் போரைத் தொடர்ந்து, கிழக்கு ஜெருசலேம், காசா பகுதி மற்றும் கோலன் குன்றுகள் உட்பட மேற்குக் கரையை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. சர்வதேச சமூகம் இந்த பிரதேசங்களை ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களாகக் கருதுகின்றது. அதே நேரத்தில் இஸ்ரேல் இந்த கருத்தை மறுதலிக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சர்வதேச சட்டத்தின் பிரகாரம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுவுவது சட்டவிரோதமாகும் (Fourth Geneva Convention, Art. 49). எனினும், இஸ்ரேலானது ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களில் யூதக் குடியிருப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. பாலஸ்தீனர்களின் பார்வையில் இந்தக் குடியேற்றத்திட்டங்கள் அவர்களின் சுதந்திர அரசை கேள்விக்குட்படுத்தி யூதர்களின் இருப்பை விரிவுபடுத்துவதற்கான முயற்சியாகக் காணப்படுகின்றது. இந்தக் குடியேற்றத்திட்டங்கள் இருதரப்புக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் பிரதானமான விவாதப்புள்ளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (Jacques, 2012).

மேலும், பாலஸ்தீனியர்கள் மேற்குக் கரை மற்றும் காசா பகுதியில் கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட ஒரு சுதந்திர அரசை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், எல்லைகள், பாதுகாப்பு, அகதிகள் மற்றும் ஜெருசலேமின் நிலை போன்ற பிரச்சினைகளால் இரு நாடுகளின் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் தடைகளை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் இந்தப் பிரதேசங்களுக்கு இருதரப்பினரும் வரலாற்று மற்றும் மத அடிப்படையில் தங்களுடைய உரிமையை வலியுறுத்துவதைக் காணலாம். இது எல்லைகள் மற்றும் இறைமை தொடர்பான சர்ச்சைகளுக்கு வழிவகுக்கிறது (Harms and Ferry, 2017;Center for Preventive Action, 2024;Human Rights Watch, 2021).

மேலும், புவிசார் அரசியல் நலன்கள், சர்வதேச மற்றும் பிராந்திய அரசியல் இயக்கவியல் இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினையை மேலும் சிக்கல்களுக்கு உள்ளாக்குகின்றது. அதாவது ஐக்கிய அமெரிக்கா, ரசியா, பிரித்தானியா, சீனா போன்ற பலம் வாய்ந்த சர்வதேச அரசுகளும் ஈரான், சவூதி அரேபியா மற்றும் துருக்கி போன்ற பிராந்திய அரசுகளும் தங்கள் சொந்த நலன்களைக் அடிப்படையாகக் கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் சர்வதேச சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு தடையாக இருப்பதோடு மோதலை மேலும் சிக்கலுக்குள்ளாக்குகின்றது (ELDoh, 2023).

மறுபுறம், கடந்த காலங்களில் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலை தீர்ப்பதற்கான முயற்சியாக பல்வேறு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டன. இதில் இரு தரப்பினருக்கும் இடையேயான நேரடிப் பேச்சுவார்த்தைகள், ஐக்கிய அமெரிக்கா, நோர்வே போன்ற மூன்றாம் தரப்புக்களுடான மத்தியஸ்த பேச்சுவார்த்தைகள் மற்றும் அரபு லீக் போன்ற பிராந்திய அமைப்புகளின் தலைமையிலான அமைதி முயற்சிகள் ஆகியவை அடங்கும். இந்த முயற்ச்சிகளின் முக்கிய மைல்கற்களாக 1990களில் பாலஸ்தீனிய தன்னாட்சி அதிகார சபைக்கான கட்டமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட ஒஸ்லோ உடன்படிக்கைகள் மற்றும் 2000ஆம் ஆண்டில் கேம்ப் டேவிட் உச்சிமாநாடு ஆகியவை அடங்கும். இது எல்லைகள், அகதிகள் மற்றும் ஜெருசலேமின் நிலை போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயன்றது. எனினும், இடைவிடாத முன்னேற்றம் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் இந்த முயற்சிகள் ஆழமான வேரூன்றிய வரலாற்றுக் குறைகள், பாதுகாப்புக் கரிசனைகள் மற்றும் இரு தரப்பிலும் உள்ள அரசியல் தடைகள் ஆகியவற்றால் அடிக்கடி தடைப்பட்டு, வன்முறைச் சுழற்சிகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதட்டங்களுக்கு வழிவகுத்தது என்பதோடு நிலையான அமைதியை அடைய முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Robinson, 2021).

## 6. இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலும் R2P குற்றங்களும்

இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலானது பாரியளவிலான மனித உரிமைகள் மீறல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதோடு அவை R2P யில் உள்வாங்கப்பட்டுள்ள சர்வதேச குற்றங்களை, குறிப்பாக யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பனவற்றைப் பிரதிபலிக்கின்றவையாகக் காணப்படுகின்றன. பாலஸ்தீன அரசு ரோம் நியதிச் சட்டம் (Rome Statute) மற்றும் நிறவெறி சமவாயம் (Apartheid Convention) ஆகிய இரண்டிற்கும் உறுப்பினராக உள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) தற்போது இந்த சர்வதேசக் குற்றங்களுக்காக இஸ்ரேலிய அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் பாலஸ்தீனிய ஆயுதக் குழுக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்து வருகின்றது (Duqmaq, 2022). பாலஸ்தீனியர்களுக்கு எதிரான சர்வதேசக் குற்றங்களுக்கு இஸ்ரேலிய தலைவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கான ஒரு முக்கியமான படியாக ICC யில் பாலஸ்தீனத்தின் உறுப்புரிமை பார்க்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Longobardo, 2015). பெப்ரவரி 2021இல், சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது கிழக்கு ஜெருசலேம் உட்பட, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் முழுவதிலும் செய்யப்பட்ட கடுமையான சர்வதேச குற்றங்களின் மீதான விசாரணையை மேற்கொள்வதற்கான அதிகார வரம்பைக் கொண்டுள்ளது எனத் தீர்ப்பளித்தது. மார்ச் 2021இல் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர் அலுவலகம் பாலஸ்தீனத்தின் நிலைமை குறித்து முறையான விசாரணையைத் தொடங்குவதாக அறிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (Human Rights Watch, 2021).

மறுபுறம், இஸ்ரேல் ஆனது 1967இல் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்ததில் இருந்து, சர்வதேச சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் தொடர்புடைய சர்வதேச தீர்மானங்களுக்கு முரணாக செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதேநேரம், பாலஸ்தீனிய ஆயுதக்குழுக்களும், குறிப்பாக ஹமாஸ் போன்ற தீவிரவாதக் குழுக்களும் சர்வதேச நியமங்களுக்கு முரணாக மோசமான அட்டூழியங்களை மேற்கொண்டு வருவதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது. இவை ஐ. நா. உட்பட பல்வேறுபட்ட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினாலும், ஆய்வாளர்களினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன (Report of the United Nations Fact-Finding Mission on the Gaza Conflict-2009; Human Rights Watch, 2017; Human

Rights Watch, 2021; Amnesty International, 2023a; Bellamy, 2014). இவ்வமைப்புக்கள் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் உட்பட தொடர்புடைய சர்வதேசச் சட்டத்தின் பிரகாரம் இரு தரப்பினரும் தங்களுடைய கடமைகளை கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. இந்த குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படுவதோடு பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் இராணுவ நடவடிக்கையின்போது, குறிப்பாக காஸாவில் மக்கள் குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் மீது குண்டுவீச்சுக்களை மேற்கொண்டு பொதுமக்கள் பகுதிகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டன/ மேற்கொண்டுவருகின்றன. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் குடிநீர் வசதிகள் உள்ளிட்ட பொதுமக்கள் இலக்குகள் மீதான தாக்குதல்கள், பாலஸ்தீனிய போராளிகளுடனான இராணுவ மோதலில் சரிசமவீதக் கோட்பாட்டுக்கு முரணாக எதிர்பார்க்கப்படும் இராணுவ நலன்களை விட அதிகமான உயிரிழப்புகளை விளைவித்தல். போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் போது குழந்தைகள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் உட்பட நிராயுதபாணியான பொதுமக்கள் இலக்குவைத்துக் கொல்லப்படுகின்றமை போன்ற யுத்தக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளது (Rome Statute, 1998, Art.8). 2008ஆம் ஆண்டு தொடங்கி ஒட்டுமொத்தமாக 5 போர்களில் இஸ்ரேலிய படையினரால் காசாவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பாரியளவிலான மனித உரிமை மீறல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. அதாவது 2008-2009, 2012, 2014, மே 2021 மற்றும் தற்போதைய 2023 யுத்தம் வரையிலான இந்த ஐந்து முக்கிய வருடங்கள் பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளன. இவை கொடூரமான சர்வதேச குற்றங்களாகக் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Addameer Prisoner Support and Human Rights Association,2024).

அதேநேரம் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு ஏவப்படுகின்ற ரொக்கெட் தாக்குதல்களும், அதன் விளைவாக ஏற்படுகின்ற பொதுமக்கள் உயிரிழப்புகள் மற்றும் சொத்து சேதம், பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவது போன்றவை சர்வதேச சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளன. தற்கொலை குண்டுவெடிப்புகள் மற்றும் பிற பயங்கரவாத செயல்களால் இஸ்ரேலிய குடிமக்களை குறிவைத்து, உயிர் இழப்பு மற்றும் உளவியல் அதிர்ச்சியை ஏற்படுத்துதல் போன்ற யுத்தக்குற்றங்களை ஹமாஸ் போன்ற பாலஸ்தீனிய ஆயுதக்குழுக்களும் மேற்கொண்டுள்ளன/மேற்கொண்டு வருகின்றன (Rome Statute, 1998, Art.8; Bellamy, 2014a). இதில் மிகவும் குறிப்பிட்டுக்கூறக்கூடிய அட்டூழியம் ஒக்டோபர் 7, 2023இல் ஹமாஸ் இயக்கத்தினால் இஸ்ரேலிய எல்லைக்குள் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும். இதில் சுமார் 1,200 இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள், பெரும்பாலும் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதோடு 253 பேர் பணயக்கைதிகளாக காசாவிற்கு பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டனர் (Britannica, 2024).

மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் பொறுத்தவரையில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் குடியேற்ற விரிவாக்கம் மற்றும் பாலஸ்தீன மக்களினுடைய குடியிருப்பு இடிப்புகள் போன்றவைகளின் விளைவாக பாலஸ்தீனிய மக்களை குறிப்பாக மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேம் போன்ற ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் அவர்களின் வீடுகளில் இருந்து பெருமளவிலான பலவந்தமான இடப்பெயர்வை ஏற்படுத்துதல் மற்றும் வலுக்கட்டாயமாக அவர்களின் குடியிருப்புக்களில் இருந்து மாற்றுதல், பாலஸ்தீனியர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட/ ஒழுங்குபடுத்தப்பட்ட பாகுபாடு மற்றும் நிறவெறி போன்ற நடைமுறைகள் ஆகிய பல்வேறுபட்ட

செயற்பாடுகள் மனித குலத்துக்கு எதிரான குற்றமாகக் கருதப்படுகின்றன (Rome Statute,1998, Art.7). மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வு முடிவுகளின் பிரகாரம் இஸ்ரேல் ஆனது கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் முழுவதும் மனித குலத்துக்கு எதிரான குற்றமாக உள்ளடங்கக்கூடிய நிறவெறி ஒடுக்குமுறையை மேற்கொண்டு வருகின்றது (Human Rights Watch, 2021). சர்வதேச மன்னிப்புச் சபையும் தன்னுடைய விசாரணைகளின் அடிப்படையில் இஸ்ரேலிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிறவெறிக்குற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது (Amnesty International, 2022).

எனவே, இத்தகைய சர்வதேச குற்றங்களின் தொடர்ச்சியான நிகழ்வும் சம்மந்தப்பட்ட தரப்புக்களின் கண்மூடித்தனமான ஈடுபாடும் R2P யினுடைய பிரயோகத்துக்குரிய பூரண அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. எனவே, சம்மந்தப்பட்ட தரப்புக்கள் மற்றும் பரந்த சர்வதேச சமூகத்துக்கு தங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் பாலஸ்தீன மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் உள்ளன என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## 7. இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் R2P யினுடைய பிரயோகமும் அதன் மட்டுபாடுகளும்

இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் R2P தொடர்பான சட்ட மற்றும் அரசியல் கடப்பாடுகள் காணப்படுகின்றன. இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பு சக்தியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, நான்காவது ஜெனிவா சமவாயத்தின் ஒரு ஆக்கிரமிப்புச் சக்திக்குரிய அனைத்து சிறப்பு சட்டப் பொறுப்புகளும் இஸ்ரேலுக்கு உண்டு. பாலஸ்தீனிய தன்னாட்சி அதிகார சபையானது கிழக்கு ஜெருசலேமைத் தவிர மேற்குக்கரைப் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தையும், ஹமாஸ் ஒரு இராணுவ அமைப்பாக காசாவைத் தனது பூரண கட்டுப்பாட்டிலும் வைத்துள்ளன. எனவே, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களின் இறைமை அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் இந்த மூன்று செயற்பாட்டாளர்களினாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. எனவே, அங்கு பாலஸ்தீனியர்களைப் பாதுகாப்பதற்கான முதன்மைப் பொறுப்பு இஸ்ரேல், பாலஸ்தீனிய தன்னாட்சி அதிகாரசபை மற்றும் ஹமாஸ் ஆகியவற்றுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்படுகின்றது (Bellamy,2014a). எனினும் இறுதியாகக் கூறப்பட்ட இரண்டு அதிகார மையங்களும் பூரண கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு அவை சர்வதேச சமூகத்தால் பூரண இறைமையுடைய அரசுகளாக அங்கீகரிக்கப்படவும் இல்லை என்பதும் நோக்கத்தக்கதாகும். பாலஸ்தீனியப் பிரதேசம் முழுவதும் இஸ்ரேல் பயனுள்ள அதிகாரக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டு முதல் முற்றுகையிடப்பட்ட காசா பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறியதாகக் கூறினாலும், காசா பகுதியின் மீது வான், கடல் மற்றும் தரை போன்றவற்றின் மீதான கட்டுப்பாட்டின் காரணமாக அது ஆக்கிரமிப்பு சக்தியாகவே தொடர்ச்சியாகக் கருதப்படுகின்றது. காசாவிற்கு உள்ளேயும் வெளியேயும் பாலஸ்தீனியர்களின் நடமாட்டம் மற்றும் பொருட்களின் நுழைவு மற்றும் வெளியேறுதல் ஆகியவற்றின் மீது அதன் முழுமையான கட்டுப்பாடு மற்றும் மக்கள்தொகை பதிவேட்டில் அதன் கட்டுப்பாடு ஆகியவை காணப்படுகின்றது. இந்த நிலைமை ஏனைய ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிராந்தியங்களிலும் தொடர்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Robinson, 2024; Arab Center for Research & Policy Studies, 2023).

இந்தப் பின்னணியின் அடிப்படையில் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் இடம்பெற்ற/ இடம்பெறுகின்ற சர்வதேச குற்றங்கள் மற்றும் அதனால் பாதிக்கப்படுகின்ற அப்பாவி மக்களைப் பாதுகாப்பதற்காக இஸ்ரேல் உட்பட சர்வதேச சமூகத்தால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட R2P

ஆனது ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியில் பயன்பாட்டுக்கான அடிப்படையைக் கொண்டுள்ளன. அதாவது ஆக்கிரமிப்பின் மூலம் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள இஸ்ரேலானது அதன் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வன்முறை மற்றும் பாரிய அட்டுழியங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான முதன்மைப் பொறுப்பை இந்த R2P யின் முதலாவது தூணின் மூலம் ஏற்றுக்கொள்கிறது. இதில் பாலஸ்தீனிய மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், அவர்களின் மனித உரிமைகளை மதிப்பது மற்றும் பதட்டங்களை அதிகப்படுத்தும் அல்லது வன்முறையை அதிகரிக்கும் செயல்களில் இருந்து விலகி இருப்பது ஆகியவை அடங்கும்.

R2P யின் கீழ் அட்டுழியங்களைத் தடுக்கும் பொறுப்பை இஸ்ரேல் நிலைநிறுத்தத் தவறினால் அல்லது அதைச் செய்வதற்கு உடந்தையாக அல்லது அதில் ஒரு தரப்பாக இருக்கும் பட்சத்தின் சர்வதேச சமூகமானது தடுத்தல் மற்றும் எதிர்வினையாற்றால் ஆகிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது. இது இராஜதந்திர நடவடிக்கைகள், பொருளாதாரத் தடைகள் அல்லது தீவிர நிகழ்வுகளில் ஐ. நா. பாதுகாப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இராணுவத் தலையீட்டை உள்ளடக்கியிருக்கலாம். எனவே சர்வதேச சட்டத்தை மீறும் அல்லது பாலஸ்தீன மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் இஸ்ரேல் பொறுப்புக் கூற வேண்டும்.

எனினும், இஸ்ரேல்-பாலஸ்தீனச் சூழலில் R2P யினுடைய பயன்பாடானது பல மட்டுப்பாடுகளையும், சவால்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமானதாகும். இங்கு ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் எனும் ஆக்கிரமிப்பு சக்தியானது பெரும்பாலும் ஒரு பலம்வாய்ந்த அரசாக இருப்பதால் பாதுகாப்பு சபையானது அதற்கு எதிராக வலிமையான நடவடிக்கையை அங்கீகரிப்பது சாத்தியமில்லை என்பதோடு பாதுகாப்புச் சபையில் காணப்படும் வீட்டோ அதிகார இயக்கவியலானது இந்த விடயத்தை மேலும் சிக்கலாக்குகின்றது. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைக் கொண்டு இஸ்ரேலைப் பாதுகாத்து வருகின்றது. எனவே, இந்த யதார்த்தநிலை இஸ்ரேல்-பாலஸ்தீனத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்களுக்கு செயலற்ற அல்லது பயனற்ற பதில்களை விளைவிக்ககூடியதாக உள்ளது. எனவே, ஐ.நா பாதுகாப்புச் சபையின் இந்த இயலாமை மனிதாபிமானக் கருத்தாய்வுகளுக்கும் அரசியல் நலன்களுக்கும் இடையே தெளிவான எல்லையை நிறுவுவதில் சர்வதேச சமூகத்தின் தோல்வியை பிரதிபலிக்கிறது என்ற விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது (Arab Center for Research & Policy Studies, 2023).

அடுத்ததாக ஆக்கிரமிப்பு அதிகாரத்தின் நிலை தொடர்பான சட்டத் தெளிவின்மையும் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் R2P யின் பயன்பாட்டில் விவாதத்துக்குரிய ஒன்றாகக் கானப்படுகின்றது. எனவே, இந்நிலையானது இஸ்ரேலானது R2P அடிப்படையில் தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதை குறைமதிப்பிற்கு உட்படுத்தலாம். பாலஸ்தீனியப் பகுதிகளின், குறிப்பாக மேற்குக் கரை மற்றும் காசா பகுதியின் சட்டப்பூர்வ நிலை சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. நான்காவது ஜெனிவா சமவாயத்துக்கு உட்பட்டு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் என்று சர்வதேச சமூகம் கருதும் அதே வேளையில் இஸ்ரேல் இந்த தன்மையை மறுக்கின்றது. இது சர்வதேச சட்டத்தை மீறியதற்காக இஸ்ரேலை பொறுப்புக்கூற வைப்பதில் சட்ட தெளிவின்மை மற்றும் சவால்களுக்கு வழிவகுக்கின்றது. இதனால் தெளிவான பொறுப்புக்கூறல் தன்மைகள் குறைவாகக் காணப்படுகின்றது. அதாவது ஆக்கிரமிப்பு அதிகாரத்திற்கும் ஆக்கிரமிக்கப்பட்ட அரசுக்கும் இடையே உள்ள வேறுபாடு குறைவாகி சிவிலியன்களினுடைய பாதுகாப்பிற்கு இறுதியில் யார் பொறுப்பு என்பது பற்றிய குழப்பத்தை உருவாக்குகிறது. மேலும் இஸ்ரேலிய-பாலஸ்தீனிய மோதல் அரசியல், வரலாறு மற்றும் மதம் சார்ந்த பரிமாணங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளது. மோதலின் மூல காரணங்களை எவ்வாறு நிவர்த்தி செய்வது மற்றும் இஸ்ரேலியர்கள் மற்றும்

பாலஸ்தீனியர்களின் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பதில் ஒருமித்த கருத்தை அடைவது கடினமாகக் காணப்படுகின்றது.

மேலும், இந்த மோதலில் பிராந்திய இஸ்லாமிய அரசுகளின் ஈடுபாடானது மோதற் தன்மையை மேலும் சிக்கலாக்குகின்றது. ஈரான், சவூதி அரேபியா மற்றும் துருக்கி போன்ற நாடுகள் பிராந்தியத்தில் தங்கள் சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன. இவர்களுடைய இவ் ஈடுபாடானது பதட்டங்களை அதிகரிக்கின்ற அதேவேளை மோதலைத் தீர்ப்பதற்கான சர்வதேச முயற்சிகளையும் தடுப்பதாகக் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக புவிசார் அரசியலானது R2P யினுடைய பயன்பாட்டுக்கு சவாலை ஏற்படுத்துகின்ற ஒரு மற்றுமொரு முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. அதாவது பிராந்திய விரிவாக்கம், வளங்களை பிரித்தெடுத்தல் மற்றும் மூலோபாய மேலாதிக்கம் உள்ளிட்ட புவிசார் அரசியல் நலன்களால் ஆக்கிரமிப்பானது பெரும்பாலும் இயக்கப்படுகின்ற போக்குக் காணப்படுகின்றது. இந்த நலன்கள் R2P கொள்கைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதோடு ஆக்கிரமிப்பு அதிகாரத்தின் மீது தலையிட அல்லது அழுத்தம் கொடுக்க சக்திவாய்ந்த அரசுகளின் விருப்பத்தின் மீது தாக்கம் செலுத்தலாம். எனவே, இராஜதந்திர வழிமுறைகள் மூலம் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலை தீர்க்கும் முயற்சிகள் நீடித்த அமைதியை அடைய பலமுறை தோல்வியடைந்தமையைக் காணலாம். எனவே, அமைதிச் செயற்பாட்டில் முன்னேற்றம் இல்லாதது R2P இன் செயற்திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது.

அடுத்த ஒரு முக்கியமான விடயம் பாதுகாப்புக் கரிசனைகள் ஆகும். பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அல்லது உள்ளக ரீதியான அமைதியின்மை போன்ற பாதுகாப்புக் பிரச்சனைகளை மேற்கோள் காட்டி ஆக்கிரமிப்பு சக்தியான இஸ்ரேலானது பெரும்பாலும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்துகின்றது. அதாவது இராணுவ நடவடிக்கைகள், குடியேற்ற விரிவாக்கங்கள் மற்றும் முற்றுகைக் கொள்கைகள் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அதன் நடவடிக்கைகளுக்கு இஸ்ரேல் அடிக்கடி பாதுகாப்புக் கரிசனைகளை காரணங்காட்டி நியாயப்படுத்துகின்றது. நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருக்கும்போது, இந்த நடவடிக்கைகள் பொதுமக்களின் உயிரிழப்புகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளை விளைவிக்கலாம் என்பது பொதுவாக சர்வதேச சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கரிசனையாகும் (United Nations,1999a). எனினும் இவ்வாறான நியாயமான பாதுகாப்புக் கரிசனைகள் இருந்தாலும் அவை நோக்கத்தோடு சமநிலைப்படுதாமல் மனித உரிமை மீறல்களை நியாயப்படுத்தவும், ஆக்கிரமிப்பு அதிகாரத்தை பொறுப்புக்கூற வைக்கும் முயற்சிகளைத் தடுக்கவும் ஒரு சாக்காகப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

இந்தப்பின்னணியின் அடிப்படையில் R2P ஆனது பரவலான வகையில் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. அதாவது கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையே பாரிய இடைவெளி கானப்படுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2011 இல் லிபியாவில் நேட்டோ தலையீடு, ஐ.நா பாதுகாப்பு சபைத் தீர்மானம் 1973 மூலம் அங்கீகரிக்கப்பட்டது. அரபு வசந்த எழுச்சியின் போது கடாபி ஆட்சியின் வன்முறை ஒடுக்குமுறையிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க R2P இன் கீழ் நியாயப்படுத்தப்பட்டது. எனினும், தலையீட்டின் பின்விளைவு அரசியல் ஸ்திரமின்மை மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு வழிவகுத்தது என்பதோடு இராணுவத் தலையீட்டின் எதிர்பாராத விளைவுகள் பற்றிய கேள்விகளையும் எழுப்பியது. இந்த நிகழ்வுக்குப் பின்னர் ரசியா மற்றும் சீனா போன்றவை இவைபோன்ற நிகழ்வுகளுக்கு பதிலளிப்பதில் பின்வாங்குகின்றன என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும் (Kuperman,2013).

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில், குறிப்பாக 2009 இல் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் பாரியளவிலான மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் இடம்பெற்றதுடன் அவை சர்வதேசக் குற்றங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த யுத்தத்தில் ஆபத்தை எதிர்நோக்கிய மக்களை சர்வதேச சமூகம் இந்த R2P ஊடாகப் பாதுகாக்கத் தவறியுள்ளது என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது (Kingsbury, 2012). அதேபோல் 2011 இல் தொடங்கிய சிரிய உள்நாட்டுப் போரில், இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் உட்பட பரவலான அட்டூழியங்கள் நடந்துள்ளன. R2P இன் கீழ் தலையீட்டிற்கான அழைப்புகள் இருந்தபோதிலும், மோதல் மற்றும் பூகோள அரசியல் போட்டிகளில் சிக்குண்டு சர்வதேச சமூகத்தில் ஒருமித்த கருத்து இல்லாமை மனிதாபிமான துன்பங்களுக்கு வழிவகுக்கின்றது (Halliyade, 2016). அதேபோல் மியான்மரில் ரோஹிங்கியா சிறுபான்மையினரின் துன்புறுத்தல், இன அழிப்பு, என்பன மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களாகப் பார்க்கப்படுகின்றது. இராஜதந்திர ரீதியாகவும் சர்வதேச கண்டனங்கள் மூலமாகவும் நெருக்கடியைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், மியான்மாரின் இறைமை தொடர்பான கரிசனைகள் மற்றும் பிராந்திய அரசியலின் காரணமாக R2P நடைமுறைச் செயற்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது (Thörnqvist, 2022).

எனவே, இஸ்ரேல்-பாலஸ்தீனம் மாத்திரமல்ல R2P குற்றங்களால் மேற்கூறியவாறு மக்கள் ஆபத்தில் இருக்கும் சூழ்நிலைகள் அல்லது இதுபோன்ற குற்றங்கள் நடந்துகொண்டிருக்கும் சூழ்நிலைகள் இன்று பல்வேறு இடங்களில் உள்ளன. எனவே, இங்கு சர்வதேசவாதம் பின்வாங்குவது, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீதான மரியாதை குறைதல், பாதுகாப்பு சபை போன்ற முக்கிய முடிவெடுக்கும் அமைப்புகளில் அரசியல் ஒற்றுமையின்மை மற்றும் பாதுகாப்பு போன்ற இலட்சிய நிகழ்ச்சி நிரல்களை ஊக்குவிப்பதில் தோல்வியுற்ற நிலை ஆகியவற்றின் பின்னணியில் இந்த நெருக்கடிகள் நடைபெறுகின்றன (Šimonović, 2016).

எனவேதான், அரச தலைவர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் வெளிப்படுத்திய அர்ப்பணிப்புக்கும் உலகெங்கிலும் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் தினசரி யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளியை அதிகமாகக் காணப்படுகின்றது என்றும் விமர்சிக்கப்படுகின்றது (Šimonović, 2016). அதேநேரம், சிலர் இந்தக் கோட்பாட்டை அடிப்படையிலேயே குறைபாடுடையதாகவும், வெறுக்கத்தக்கதாகவும், மறுமலர்ச்சி ஏகாதிபத்தியம் மற்றும் பயங்கரவாதத்தின் மீதான போர் ஆகியவற்றின் கலவையாக அல்லது இராணுவவாதம் மற்றும் நவ-காலனித்துவத்தை மனிதாபிமானமாக விற்கும் முயற்சியாகக் பார்க்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (El-Affendi, 2021).

எனவே, R2P யானது இஸ்ரேல்-பாலஸ்தீனிய சூழ்நிலைக்கு மாத்திரமல்ல உலகிலுள்ள ஏனைய பல சூழ்நிலைகளிலும் பல்வேறுபட்ட சவால்களை கொண்டதாகக் காணப்படுகின்றது. இறைமை அதிகாரம், புவிசார் அரசியல் மற்றும் தலையீடுகளின் செயற்திறன் ஆகியவற்றால் அதன் பயன்பாடு சர்ச்சைக்குரியதாகவும் விவாதத்திற்கு உட்பட்டதாகவும் உள்ளது. எனினும் கோட்பாட்டு ரீதியாக R2P யானது இஸ்ரேல்-பாலஸ்தீனம் உட்பட அனைத்து சூழ்நிலைக்கும் பொதுவானதாகும். ஏனெனில் சர்வதேச குற்றங்கள் மனிதர்கள் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் ஒரே விதமான தாக்கத்தையும் விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதாகும். எனவே, R2P சில சூழ்நிலைகளுக்கு பொருந்துகிறதா இல்லையா என்பது பற்றி எந்த கேள்வியும் இருக்கக்கூடாது என விவாதிக்கப்படுகின்றது. உண்மையில், அந்த கேள்வியை முன்வைப்பது 2005இல் R2P பற்றி

அரசுகள் ஒப்புக்கொண்டதைத் தவறாகக் கருதுகின்றது. எனவே, R2P நிபந்தனைக்குட்பட்டது அல்ல. இது சூழ்நிலையுடன் எழுவதும் மறைவதும் அல்ல. இது உலகளாவிய கொள்கையாக நீடித்துக் காணப்படுகின்றது. எனவே, அது எல்லா இடங்களிலும், எல்லா நேரத்திலும் பொருந்தக்கூடியதாகும். ஐ. நா. பொதுச் செயலாளர் R2P பற்றிய தனது 2012 அறிக்கையில் துல்லியமாக இந்தக் கருத்தைக் குறிப்பிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (Bellamy, 2014; Ismail, 2022; Report of the Secretary-General on Responsibility to protect: timely and decisive response, 2012).மேலும், R2P வெறுமனே பலப்பிரயோகத்தின் அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் தலையீட்டினை மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு அதன் செயற்திறனை மதிப்பிடக்கூடாது. ஏனைய இரு தூண்களையும் சேர்த்துப்பார்க்கவேண்டும் ஏனெனில் இம்மூன்று தூண்களும் சம முக்கியத்துவமுடைய தூண்களாகும். சில சூழ்நிலைகளில் சர்வதேச சமூகம் சர்வதேச மற்றும் பிராந்திய அரசியல் யதார்த்தங்களைக் கருத்தில் கொண்டு சர்வதேசக் குற்றங்களைத் எதிர்காலத்தில் தடுப்பதற்கான முயற்சிகளை படிப்படியாக மேற்கொண்டுவருவதோடு R2P ஆனது சர்வதேச நிகழ்ச்சிநிரலில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதையும் அவதானிக்கலாம்.

## 8. முடிவுரை

R2P ஆனது யுத்தக்குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் இனப்படுகொலை போன்ற சர்வதேச குற்றங்களைத் தடுப்பதற்காகவும், அதற்குப் பதிலளிப்பதற்காகவும் உலகத் தலைவர்களால் 2005 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் அர்ப்பணிப்பாக காணப்படுகின்றது. இது பாரிய அட்டூழியங்களைக் கொண்ட சர்வதேசக் குற்றங்களை சர்வதேச சமூகம் மீண்டும் நிகழ்வதை நிறுத்துவதற்குத் தவறாது என்பதை உறுதிப்படுத்த முயல்கிறது. R2P ஆனது சர்வதேசக் குற்றங்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் மக்களைப் பாதுகாப்பதில் தனிப்பட்ட நாடுகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஒட்டுமொத்த சர்வதேச சமூகம் போன்றவற்றின் பொறுப்பை விவரிப்பதாகக் காணப்படுகின்றது. இந்தக் குற்றங்களிலிருந்து தமது சொந்த மக்களைப் பாதுகாப்பதற்கான அரசின் பொறுப்பு, இந்தக்கடமையை நிறைவேற்றுவதில் அரசுகளுக்கு உதவுவதற்கான சர்வதேச சமூகத்தின் பொறுப்பு, மற்றும் ஒரு அரசு இந்தக்குற்றங்களை தடுக்க இயலாமல் அல்லது விரும்பாதபோது குறிப்பிட்ட நாட்டின் மக்களைப் பாதுகாப்பதற்காகத் தலையிடும் சர்வதேச சமூகத்தின் பொறுப்பு போன்ற மூன்று பிரதான தூண்களை உள்ளடக்கியதாக R2P காணப்படுகின்றது. எனினும் இந்த எதிர்பார்ப்புக்கும், நடைமுறைக்கும் இடையே பாரியளவிலான இடைவெளி காணப்படுவதைக் காணலாம். R2P யானது நடைமுறை யதார்த்தத்தில் காணப்படுகின்ற பல்வேறு நிகழ்வுகளினால் தாக்கத்திற்கு உட்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மறுபுறம், இந்த ஆய்வுக்கட்டுரையில் முக்கிய மையமாகக் காணப்படும் இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலானது உலகில் காணப்படும் பழமையான தீர்க்கப்படாத மோதல்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள், குறிப்பாக இஸ்ரேலிய அரச படைகள் மற்றும் பாலஸ்தீனப் போராளிக்குழுக்கள் ஆகிய இரண்டுமே பாரியளவிலான மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களை பரவலாக மேற்கொள்கின்றன என்பதோடு அவை சர்வதேசக் குற்றங்களாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. பாலஸ்தீனிய மக்கள் இத்தகைய சர்வதேசக் குற்றங்களால் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றவர்களாகவும், பாதிக்கப்படுகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். எனவே, இந்த மக்களைப் பாதுகாப்பதற்காகவும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவதற்காகவும் R2P யினுடைய பூரணமான பயன்பாட்டுக்கு இஸ்ரேல்-பாலஸ்தீனச் சூழ்நிலையானது தகுதியுடையதாகக்

காணப்படுகின்றது. கோட்பாட்டுரீதியாக ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பாலஸ்தீனிய பிரதேசங்களில் பாரிய அட்டூழியங்களை தடுப்பதற்கும் அதற்கு பதிலளிப்பதற்குமான பிரதான பொறுப்பை இஸ்ரேல் ஏற்றுக்கொள்கின்ற அதேநேரம் பாலஸ்தீனிய அதிகாரசபை மற்றும் ஹமாஸ் போன்றவையும் பகுதியளவான பொறுப்பைக் கொண்டுள்ளன. எனினும் ஒரு ஆக்கிரமிப்புச் சத்தியாக இஸ்ரேலானது அடிப்படை பொறுப்பைக் கொண்டுள்ளது. சர்வதேச சமூகமானது சர்வதேசக்குற்றங்களைத் தடுப்பதற்கும், பதிலளிப்பதற்குமான கடப்பாட்டைக் கொண்டுள்ளது. எனினும், நடைமுறை ரீதியில் இந்தச் சூழ்நிலைக்கு R2P இன் பயன்பாடு பல்வேறு சிக்கல்களும் சவால்களும் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் அரசியல்ரீதியாக சிக்கலான தன்மை, பாதுகாப்பு கரிசனைகள், சட்டத் தெளிவின்மை, அதிகார இயக்கவியல், புவிசார் அரசியல் நலன்கள் மற்றும் இராஜதந்திரரீதியான சவால்கள் உள்ளிட்ட சவால்களால் நிறைந்துள்ளது. எனவே, R2P யின் பிரகாரம் இஸ்ரேல் மாத்திரமல்ல சர்வதேச சமூகமும் தங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றத்தவறியுள்ளன. தண்டனையின்மை பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து துன்பத்தை ஏற்படுத்துகின்றது. இந்த சவால்களை எதிர்கொள்வதற்கு, மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும், பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கும், இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுக்கு நியாயமான மற்றும் அமைதியான தீர்வை நோக்கி பணியாற்றுவதற்கும் சர்வதேச சமூகத்தின் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகிறது. இந்தக் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கான நீடித்த அர்ப்பணிப்பு மூலம் மட்டுமே இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனியர்களின் உரிமைகளும் கண்ணியமும் பாதுகாக்கப்பட்டு நிலைநிறுத்தப்படும்.

## References


Addameer Prisoner Support and Human Rights Association (2024). *Escalating Oppression: Israel's Systematic Violations Intensify in Palestine Post-October 7, 2023*. [online] Available at: https://www.un.org/unispal/wp-content/uploads/2024/04/Sahar-Francis.pdf [Accessed 16 Apr. 2024].

Amnesty International (2022). *Cruel System of Domination and Crimes Against Humanity*. [online] Available at: https://www.amnestyusa.org/wp-content/uploads/2022/01/Executive-Summary.pdf [Accessed 16 Apr. 2024].

Amnesty International (2023a). *Israel/OPT: Horrifying cases of torture and degrading treatment of Palestinian detainees amid spike in arbitrary arrests*. [online] Amnesty International. Available at: https://www.amnesty.org/en/latest/news/2023/11/israel-opt-horrifying-cases-of-torture-and-degrading-treatment-of-palestinian-detainees-amid-spike-in-arbitrary-arrests/ [Accessed 16 Apr. 2024].

Amnesty International (2023b). *Israeli attacks wipe out entire families in Gaza*. [online] Amnesty International. Available at: https://www.amnesty.org/en/latest/news/2023/10/damning-evidence-of-war-crimes-as-israeli-attacks-wipe-out-entire-families-in-gaza/ [Accessed 3 Apr. 2024].

Arab Center for Research & Policy Studies (2023). *Humanitarian Intervention and the Responsibility to Protect in Palestine*. [online] www.dohainstitute.org. Available at: https://www.dohainstitute.org/en/PoliticalStudies/Pages/humanitarian-intervention-and-the-protection-responsibility-in-palestine.aspx [Accessed 21 Apr. 2024].

Bard, M. (2019). *Jewish Claim to the Land of Israel*. [online] Jewishvirtuallibrary.org. Available at: https://www.jewishvirtuallibrary.org/jewish-claim-to-the-land-of-israel [Accessed 26 Apr. 2024].

BBC (2023). Israel-Gaza violence: the Conflict Explained. *BBC News*. [online] 15 Nov. 2023.Available at: https://www.bbc.com/news/newsbeat-44124396 [Accessed 20 Apr. 2024].

Bellamy, A.J. (2014a). *The Responsibility to Protect and the 2014 Conflict in Gaza*. [online] E-International Relations.

Available at: https://www.e-ir.info/2014/07/22/the-responsibility-to-protect-and-the-2014-conflict-in-gaza/ [Accessed 21 Apr. 2024].

Bellamy, A.J. (2014b). *Responsibility to protect: a defense*. Oxford: Oxford University Press.
Britannica (2019). Arab-Israeli wars | History, Conflict, & Facts. In: *Encyclopædia Britannica*. [online] Available at: https://www.britannica.com/event/Arab-Israeli-wars [Accessed 20 Apr. 2024].

Britannica (2024). *Israel-Hamas War | Explanation, Summary, Casualties, & Map | Britannica*. [online] www.britannica.com. Available at: https://www.britannica.com/event/Israel-Hamas-War [Accessed 24 Apr. 2024].

Center for Preventive Action (2024). *Israeli-Palestinian Conflict*. [online] Global Conflict Tracker. Available at: https://www.cfr.org/global-conflict-tracker/conflict/israeli-palestinian-conflict [Accessed 25 Apr. 2024].

Dahl-Eriksen, T. (2016). R2P and the 'Thin Cosmopolitan' Imagination. *The Fletcher Forum of World Affairs*, [online] 40(2), pp.123–137. Available at: https://www.jstor.org/stable/45290176 [Accessed 3 Apr. 2024].

Department of Public Information (2012). *The Responsibility to Protect Who is responsible for protecting people from gross violations of human rights?* [online] Department of Public Information, Rwanda Genocide and the United Nations. Available at: https://www.un.org/en/preventgenocide/rwanda/pdf/bgresponsibility.pdf [Accessed 14 Apr. 2024].

Duqmaq, N. (2022). Israel's International Legal Responsibility for Human Rights Violations in the Occupied Palestinian Territory In accordance with the provisions of international law. *Journal of Palestine Ahliya University for Research and Studies*, 1(1), pp.4–36. doi: https://doi.org/10.59994/pau.2022.1.4.

El-Affendi, A. (2021). *Palestine and the UN's 'responsibility to protect' doctrine*. [online] www.aljazeera.com. Available at: https://www.aljazeera.com/opinions/2021/6/1/the-uns-responsibility-to-protect-doctrine-in-palestine [Accessed 21 Apr. 2024].

El-Affendi, A. (2023). *Where is the 'responsibility to protect' in Gaza?* [online] Al Jazeera. Available at: https://www.aljazeera.com/opinions/2023/10/31/where-is-the-responsibility-to-protect-in-gaza [Accessed 21 Apr. 2024].

ELDoh, D.M. (2023). *Middle East on the Brink: Why the Conflict in Gaza Must Stop*. [online] Geopolitical Monitor. Available at: https://www.geopoliticalmonitor.com/middle-east-on-the-brink-why-the-conflict-in-gaza-must-stop/ [Accessed 27 Apr. 2024].

Global Centre for the Responsibility to Protect. (2023a). *Atrocities Present, Past and Future - Escalating Crimes and Consequences in Israel and Occupied Palestine*. [online] Available at: https://www.globalr2p.org/publications/atrocities-present-past-and-future-escalating-crimes-and-consequences-in-israel-and-occupied-palestine/.

Global Centre for the Responsibility to Protect (2023b). *What is R2P?* [online] Global Centre for the Responsibility to Protect. Available at: https://www.globalr2p.org/what-is-r2p/ [Accessed 17 Apr. 2024].

Halliyade, M. (2016). Syria -Another Drawback for R2P? An Analysis of R2P' s Failure to Change International Law on Humanitarian Intervention. *Indiana Journal of Law & Social Equality*, [online] 4(2). Available at: https://www.repository.law.indiana.edu/cgi/viewcontent.cgi?article=1049&context=ijlse [Accessed 24 Apr. 2024].

Harms, G. and Ferry, T.M. (2017). *The Palestine-Israel conflict: a basic introduction*. London Pluto Press.

Hofmann, G. (2023). The International Implementation of R2P: Norm Contestation and Its Consequences. In: Reichwein, A and Hansel, M., eds., *Rethinking the Responsibility to Protect. Contributions to International Relations.*

Cham: Springer, pp.23–51. doi:https://doi.org/10.1007/978-3-031-27412-1_2.

Human Rights Watch (2017). *Israel: 50 Years of Occupation Abuses*. [online] Human Rights Watch. Available at: https://www.hrw.org/news/2017/06/04/israel-50-years-occupation-abuses [Accessed 16 Apr. 2024].

Human Rights Watch (2021). *A Threshold Crossed: Israeli Authorities and the Crimes of Apartheid and Persecution*. [online] Human Rights Watch. Available at: https://www.hrw.org/report/2021/04/27/threshold-crossed/israeli-authorities-and-crimes-apartheid-and-persecution [Accessed 15 Apr. 2024].

Ismail, A. S.E. (2022). *The Responsibility to Protect Doctrine in the Context of the Atrocity Crimes in the Occupied Palestinian Territories: Does it Apply? USIM Research Repository System*. [online] Available at: https://oarep.usim.edu.my/jspui/bitstream/123456789/19550/1/The%20Responsibility%20To%20Protect%20Doctrine%20In%20The%20Context%20Of%20The%20Atrocity%20Crimes%20In%20The%20Occupied%20Palestinian%20Territories%20Does%20It%20Apply.pdf.

Jacques, M. (2012). Case study: Israeli settlements, the Separation Wall and displacement of civilians in the Occupied Palestinian Territory. In: *Armed Conflict and Displacement: The Protection of Refugees and Displaced Persons under International Humanitarian Law*. Cambridge: Cambridge University Press, pp.77–124.

Kingsbury, D. (2012). *Sri Lanka and the Responsibility to Protect*. London: Routledge.

Kuperman, A.J. (2013). A Model Humanitarian Intervention? Reassessing NATO's Libya Campaign. *International Security*, [online] 38(1), pp.105–136. Available at: https://www.jstor.org/stable/24480571 [Accessed 24 Apr. 2024].

Longobardo, M. (2015). Some Developments in the Prosecution of International Crimes Committed in Palestine: Any Real News? *Polish Yearbook of International Law*, 35, pp.109–138. doi: https://doi.org/10.7420/pyil2015d.

Mardiyanto, I and Hidayatulloh, H (2023). The Responsibility to Protect (R2P) Concept as an Attempt for Protection of Human Rights in International Humanitarian Law Context. *Volksgeist: Jurnal Ilmu Hukum dan Konstitusi*, VI(II), pp.103–118. doi:https://doi.org/10.24090/volksgeist.v6i1.7229.

Pacheco, L.C. dos S. (2022). *The Responsibility to Protect (R2P) take-off: A constructivist analysis of the R2P based on its application in the conflict in Libya and Syria*. [online] www.teses.usp.br. Available at: https://www.teses.usp.br/teses/disponiveis/101/101131/tde-03052022-080714/pt-br.php.

Paris, R. (2014). The 'Responsibility to Protect' and the Structural Problems of Preventive Humanitarian Intervention. *International Peacekeeping*, 21(5), pp.569–603. doi:https://doi.org/10.1080/13533312.2014.963322.

*Report of the Secretary-General on Responsibility to protect: timely and decisive response (2012), A/66/874*. [online] Undocs.org. Available at: https://undocs.org/Home/Mobile?FinalSymbol=A%2F66%2F874&Language=E&DeviceType=Desktop&LangRequested=False [Accessed 24 Apr. 2024].

*Report of the Secretary-General on We the Peoples: The Role of the United Nations in the 21st Century", (2000)* (Millennium Report 2000). *https://www.diplomacy.edu/resource/we-the-peoples-the-role-of-the-united-nations-in-the-21st-century/*. United Nations. [Accessed 14 Apr.2024].

*Report of the United Nations Fact-Finding Mission on the Gaza Conflict (2009). United Nations Human Rights Council. Search Results - United Nations Digital Library System*. [online] Un.org. Available at: https://digitallibrary.un.org/search?f1=author&as=1&sf=title&so=a&rm=&m1=e&p1=UN.+Human+Rights+Council.+Fact-Finding+Mission+on+the+Gaza+Conflict&ln=en [Accessed 22 Apr. 2024].

Robinson, K. (2021). *What Is U.S. Policy on the Israeli-Palestinian Conflict?* [online] Council on Foreign Relations. Available at: https://www.cfr.org/backgrounder/what-us-policy-israeli-palestinian-conflict [Accessed 27 Apr. 2024].

Robinson, K. (2024). *Who Governs the Palestinians?* [online] Council on Foreign Relations. Available at: https://www.cfr.org/backgrounder/who-governs-palestinians [Accessed 27 Apr. 2024].

Shukla, G. (2023). Doctrinal Legal Research. *Advances in knowledge acquisition, transfer and management book series (Print)*, pp.226–239. doi:https://doi.org/10.4018/978-1-6684-6859-3.ch015.

Shveitser, V. (2021). *Part I (1917-1947)*. [online] Question of Palestine. Available at: https://www.un.org/unispal/history2/origins-and-evolution-of-the-palestine-problem/part-i-1917-1947/ [Accessed 27 Apr. 2024].

Šimonović, I. (2016). *The Responsibility to Protect, No. 4 Vol. LIII, Human Rights*. [online] United Nations. Available at: https://www.un.org/en/chronicle/article/responsibility-protect [Accessed 21 Apr. 2024].

Tang Abomo, P. (2019). *R2P and the US Intervention in Libya*. Cham: Springer International Publishing. doi:https://doi.org/10.1007/978-3-319-78831-9.

Thörnqvist, F. (2022). *The 'Responsibility to Protect' in Myanmar Investigating the call for R2P through the Epistemic Community*. [online] Available at: https://lup.lub.lu.se/luur/download?func=downloadFile&recordOId=9081612&fileOId=9083714

United Nations (1999a). *Israeli occupation and international humanitarian law - Conf. of High Contracting Parties to 4th Geneva; Convention - Paper by Palestine/Non-UN document*. [online] Question of Palestine. Available at: https://www.un.org/unispal/document/auto-insert-199015/ [Accessed 30 Apr. 2024].

United Nations (1999b). *Secretary-General Presents his Annual Report to General Assembly | UN Press*. [online] press.un.org. Available at: https://press.un.org/en/1999/19990920.sgsm7136.html.

United Nations (2005). *Resolution adopted by the General Assembly on 16 September 2005(60/1. 2005 World Summit Outcome)*. [online] United Nations. Available at: https://www.un.org/en/development/desa/population/migration/generalassembly/docs/globalcompact/A_RES_60_1.pdf [Accessed 21 Apr. 2024].

United Nations (2019). *United Nations Office on Genocide Prevention and the Responsibility to Protect*. [online] United Nations. Available at: https://www.un.org/en/genocideprevention/about-responsibility-to-protect.shtml [Accessed 17 Apr. 2024].

*United Nations Secretary General Report on Implementing the Responsibility to Protect, 2009*. [online] Global Centre for the Responsibility to Protect. Available at: https://www.globalr2p.org/resources/implementing-the-responsibility-to-protect-2009/ [Accessed 21 Apr. 2024].

Zifcak, M. (2015). *The responsibility to protect at the United Nations. In Sampford, C., Zifcak, S., & Okur, D. A. (Eds.), Rethinking International Law and Justice (pp. 255-279). Ashgate Publishing Limited.*